மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருவருக்கும் நன்றி.

வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.J. மணிக்கண்ணன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

43—

மின் இணைப்பு

***1941—திரு. A.J. மணிக்கண்ணன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதியில் விவசாயிகளுக்கு விவசாய மின் இணைப்பு வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கிய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் வழியில், விவசாயிகளுக்கு விடியலைத் தந்த மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களின் பொற்கால ஆட்சியில், 2021-2022 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு ஒரு இலட்சம் மின் இணைப்புகள் வழங்கப்படும் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க உத்தரவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுக்கு ஒரு இலட்சம் மின் இணைப்புகள் வழங்கக்கூடிய சிறப்புவாய்ந்த இந்தத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைக்கவிருக்கின்றார்கள்.

உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் மின் இணைப்புக்காகப் பதிவு செய்து காத்திருக்கின்ற விவசாயிகளும் இந்த ஒரு இலட்சம் மின் இணைப்புகளில் பயன்பெறவிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2021 செப்டம்பர் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.J. மணிக்கண்ணன் அவர்கள்.*

திரு. A.J. மணிக்கண்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய உளுந்தூர்பேட்டை தொகுதியைப் பொறுத்தமட்டில் அதிகமான விவசாயிகள் நிறைந்துள்ள பகுதியாகும். உளுந்தூர்பேட்டை உட்கோட்டத்தில் விவசாயிகள் மின் இணைப்பு கோரி, விண்ணப்பித்து, 13 ஆண்டுகளாகக் காத்திருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் விரைந்து மின் இணைப்பு வழங்கக் கோருகிறேன். இந்த ஆண்டு உளுந்தூர்பேட்டை உட்கோட்டத்திற்கு எவ்வளவு ஒதுக்கீடு செய்து தருவார்கள் என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் 4,52,777 விவசாயிகள் மின் இணைப்புக்காகப் பதிவு செய்து காத்திருக்கின்றார்கள். ஏறத்தாழ 18 ஆண்டுகள் வரை பதிவு செய்து, வருகின்ற ஆட்சி விடியலைத் தரும் என்று மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்கள்மீது நம்பிக்கை வைத்து, மின் இணைப்புகளுக்கான அறிவிப்புகளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள். இந்த அறிவிப்புகளுக்குப் பிறகு பல்வேறு விவசாயிகள் பலர் என்னிடத்திலே பேசுகின்றபொழுது, 'நாங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நேரிலே சந்தித்து நன்றி தெரிவிக்க வேண்டும், எங்கள் வாழ்நாள் நன்றிகளைத் தெரிவிக்க வேண்டும்' என்று அவர்களுடைய உள்ள உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள். குறிப்பாக, 18 ஆண்டுகள் வரை பதிவு செய்து காத்திருக்கின்றார்கள். அந்தவகையில், உளுந்தூர்பேட்டையில் இருக்கக்கூடிய 4,554 விவசாயிகளும் இந்த மின் இணைப்புகளுக்குள்ளே கணக்கெடுக்கப்பட்டு இருக்கின்றார்கள். மிக விரைவாக ஒரு இலட்சம் மின் இணைப்புகள் வழங்கும் சிறப்புவாய்ந்த திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைக்கவிருக்கின்றார்கள். இந்த 2021–2022 ஆம் ஆண்டில் மட்டும் ஒரு இலட்சம் விவசாயிகள் மின் இணைப்புகள் பெற்று பயன்பெறவிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A.J. மணிக்கண்ணன் அவர்கள்.

திரு. A.J. மணிக்கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகமெங்கும் ஒரு இலட்சம் விவசாய மின் இணைப்புகள் வழங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தமைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்றையதினம் விவசாயிகளைப் பொறுத்தமட்டில் நமது அரசைத்தான் அவர்கள் முழுமையாக நம்பியிருக்கின்றார்கள். இத்திட்டத்திற்கு விவசாயிகள் மத்தியில் பெருமளவில் வரவேற்பு இருந்துகொண்டிருக்கிறது. எங்கள் பகுதியில் ஒரு துணை மின் நிலையம் கோரி விண்ணப்பம் செய்திருந்தோம். அதனையும் இந்த பட்ஜெட்டில் அறிவித்திருக்கின்றார்கள். மின்மாற்றிகள் பழுதுபட்டவுடனே அதனையும் மாற்றியிருக்கின்றார்கள். அதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லிவிட்டீர்கள்.

வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

44—

நூலகம்

***3269—திரு. ச. சிவகுமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், ஈச்சூர் கிராமத்தில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு பதிலை இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.

TRUTH ALONE TRIUMPHS